தந்திருக்கிறார்கள். மாநில அரசைப் பொறுத்தவரைக்கும், ஸ்டேட் சப்சிடி, 10 சதவீதம், மாநில சலுகையைப் பொறுத்த வரைக்கும், மானியத் தொகை அந்தப் பகுதிக்கும் அப்லிகப் பிள் என்ற முறையில் அதை எக்ஸ்டென்ட் செய்யப்பட்டிருக்கிறது அதுவும் குறிப்பாக

'Electronic based industry;
Automobile based industry;
Drugs and Pharmaceuticals based industry'.

ஆகிய தொழில்கள் எல்லாம் முன்னுரிமை பெற்று தொழில்கள் என அந்தத் தொழில்களுக்கு எல்லாம் இந்த 10 சதவீதம் சலுகையும் தரலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. மாநில அரசு ஏற்றுமதி தொழில் மண்டலத்திற்கான நிலத்தை நீண்ட கால குத்தகை அடிப்படையில் தர உள்ளது. 50 வருடம், 90 வருடம் 100 வருடம் என்று நீண்டக் கால லீஸ் அடிப்படையிலே தரப்பட இருக்கின்ற காரணத்தால், அவர்களுக்குச் சலுகை கிடைக்கிறது.

அது மட்டுமல்ல, எலக்ட்ரிசிடி டாரிப் கன்செசன், மின்சாரம் அவர்களுக்கு சலுகை விலையில் தர வேண்டும் என்று உத்தர விட்டு இருக்கிறது. அதைப் போலவே ஐ.டி.பி.ஐ. போன்றவை களிடமிருந்து லோன்ஸ் 'சீட் கேப்பிட்டலாக', 15 இலட்சம், அல்லது 10 சதவீதம் என்ற அளவிற்கு அவர்களுக்கு தரப்பட வேண்டும் என்ற சலுகையும் தரப்பட்டிருக்கிறது.

அரசு தயாரிக்கும் எல்காட் கடிகாரங்களை விற்பனை செய்வதற்கான உரிமம்

184—*வினா எண். 17922—திரு. ப. திர்த்தராமன்: மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் அரசு தயாரிக்கும் 'எல்காட்' கடி காரங்களை விற்பனை செய்ய தனியார் வியாபாரிகளுக்கு உரிமை அளிக்கப்பட்டிருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், எந்த அடிப்படையில் யார் யாருக்கு அளிக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) மற்றும் (ஆ) : அவை முன் **விவர அறிக்கை வைக்கப் பட்டுள்ளது.

** 487-489-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.